# சட்டமன்ற தேர்தலில் பா.ம.க. தலைமையில் 3வது அணி அமைப்போம்: டாக்டர் ராமதாஸ் # தர்மபுரி பஸ் எரிப்பு வழக்(

Difficulty reading Tamil Text?
Download Font

Logout

விகடன்.COM | ஜுனியர் விகடன் | அவள் விகடன் | சுட்டி விகடன் | சக்தி விகடன் | நாணயம் விகடன் | மோட்டார் விகடன்
பசுமை விகடன் | சினிமா விகடன் | முந்தைய இதழ் | பிரசுரங்கள் | பிரிண்ட் சந்தா | யோக காலம் | இ-புத்தகம்

Issue Date: 07-11-07

குரு தரிசனம்

வாசல்
அரசியல்
ஸ்பெஷல்-1
ஸ்பெஷல்-2
நையாண்டி
கதைகள்
சினிமா
இலக்கியம்
தொடர்கள்
சுவடுகள்
உங்கள் கருத்து
சந்தா

அறிந்தும் அறியாமலும்..!

## ஞாநி (30)



தன் கருத்துக்களைப் பகிரங்கமாகப் பேசும் துணிச்சலுக்குப் புகழ்பெற்ற நடிகவேள் எம்.ஆர்.ராதா, சுய பால் ஈர்ப்பும் உறவும் 1930-40-களில் பாய்ஸ் நாடகக் கம்பெனி சூழலில் இருந்தது பற்றி 1971-ல் தெரிவித்த தகவல்களில் ஒரு முக்கியமான அம்சம்... அது குழந்தைகளுக்கு எதிரான பாலியல் கொடுமையாக அப்போது பின்பற்றப்பட்டது என்ப-தாகும். சில கனவான்கள் சிறுவர்களை விலைக்கு வாங்கிக்கொண்டுபோய் பாலியல் கொடுமை செய்த தகவலை ராதா தெரிவித்திருக்கிறார். இதே சூழல், பிரிட்டனிலும் இதர நாடுகளிலும்கூட இதுபோன்ற சில குழுக்களில் இருந்தது.

இந்தக் கட்டுரைத் தொடர் எழுதப்படும் சமயத்-தில்கூட, சென்னையில் ஒரு விடுதியில் ஓரின உடல் உறவுக்குத் தன்னை வற்புறுத்திய மேனே-ஜரை ஓர் இளைஞர் கத்தியால் குத்திக் கொன்ற செய்தி வெளி யாகியுள்ளது. எதிர் பால் உறவுகளைவிட சுய பால் உறவுக்கு ஜோடி கிடைப்பது சிக்கல் மட்டு-மல்ல... இது பகிரங்கமாகத் தேடலில் ஈடுபட முடி-யாத உறவாகவும் இருப்பதால், இதில் வன்முறை கூடுதலாக இருப் பதில் வியப்பில்லை!

Desktop Bikini Wallpaper
Bargain Prices. Smart Deals. Save on Desktop Bikini Wallpaper!
Shopzilla.com

அடுத்து ராதா தெரிவிக்கும் இன்னொரு கருத்து -சுய பால் உறவினால் பல தோழர்கள் மகப்பேறுக்கு லாயக்கற்றவர்களாகிவிட்டார்கள் என்பது. மருத்துவ-ரீதியாக இது சரியல்ல. மலட்டுத்தன்மை என்பது பல காரணங்களால் ஏற்படக்கூடியது. அதில் சுய பால் உறவு ஒரு நேரடிக் காரணமல்ல!

test
test test
test.com

இறுக்கமான உள்ளாடைகள் அணிவதுகூட ஆண்-களில் சிலருக்கு மலட்டுத்தன்மையை ஏற்-படுத்தக்கூடும் என்பது மருத்துவக் கருத்து. பால்வினை நோய்கள் மலட்டுத்தன்மையை ஏற்படுத்தலாம். முறையற்ற எதிர் பால் உறவிலும் பால்வினை நோய் ஏற்படத்தான் செய்கிறது.

ஆணை ஆணே (அல்லது, பெண்ணை பெண்ணே) மோகிக்கும் பழக்கத்தை ராதா தன் பேட்டியில் 'காட்டு-மிராண்டித்தனமான' பழக்கம் என்றும் குறிப்-பிட்டு இருக்கிறார். காட்டுமிராண்டி என்பது ஆதி மனித வாழ்க்கையைக் குறிக்கும். ஆதி மனிதர்களின் வாழ்க்கையில் சில ஆக்கபூர்வமான, குறிப்பாக சுற்றுச்-சூழலுக்கு நேசமான அணுகுமுறைகள் இருந்ததை இப்போதுதான் உணரத் தொடங்கி--யிருக்கிறோம்.



'மிருகத்தனமான' என்பது 'மனிதர்களைப் போல சிந்திக்கும் திறனற்ற விலங்குகள் போன்று' என்ற அர்த்தத்தில் சொல்லப்-படு-கிறது. அதேசமயம், பல மனிதச் செயல்களையும் அவற்-றின் வேர்களையும் புரிந்து-கொள்ள, எப்போதுமே விலங்கு-களின் - இதர உயிர்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள்தான் இன்றும் உதவுகின்றன.

சுய பால் விழைவு என்பது மிருகத்தனமான ஒரு நிலை என்று வர்ணிப்பதும்கூட அது மனித இயற்-கைக்கு ஒவ்வாத கொடூரச் செயல் என்ற அர்த்தத்-திலேயே ஆகும்.

ஆனால், 'சுய பால் விழைவு என்பது இயற்கையில் இல்லாத ஒன்றோ மனக் கோளாறோ அல்ல...' என்ற அணுகுமுறையை இன்று பார்க்க முடிகிறது.

Free Background Pictures
Huge Inventory Of Backgrounds Download Your Own For Free Today!
www.FunUtilities.com/Wallpapers

Free Amazing Wallpapers
Over 9,000 Incredible Wallpapers Quick & Easy Download. Try it Now!
www.vombashots.com

Desktop Wallpapers
1000s of Screensavers. All Free! Pimp out your desktop screen.
CoolerCode.com/Screensavers

3d Desktop Wallpaper
Find 3d Desktop Wallpaper Here. Fast in the Ansearch Directory.
www.AnSearch.com

Desktop Computer
Desktop Computer guide Computer directory listings.
ComputerReserve.net

விலங்கு, பறவைகளில் தாமே இரு பாலுமாக இருக்கும் வகைகள் இயற்கையிலேயே உண்டு. சுமார் 1,500 வகை உயிரினங்களில் சுய பால் விழைவுச் செயல்பாடுகளும் இருப்பது கண்டறியப்பட்-டுள்ளது.

காட்டெருமை, யானை, சிங்கம், மான், பூனை, சிறுத்தை, நாய், பசு, முயல், ஒட்டைச்சிவிங்கி, ஆடு, குரங்கு, கரடி, குதிரை, நரி, மரங்-கொத்திப் பறவை, கிளி, குருவி, ஆந்தை, பெங்குயின், கொக்கு, கழுகு, லவ்பேர்ட்ஸ், வாத்து, மீன், பல்லி, பாம்பு, ஆமை, கரப்பான்-பூச்சி, பட்டாம்-பூச்சி, வண்டுகள் ஆகிய இனங்-களும் இந்தப் பட்டி-யலில் வரு-கின்றன.



ஒரு ஜோடி ஆண் பறவைகள் தம்பதியாகக் கூடு கட்டி வாழும்-போது, முட்டைகளுக்குப் பதி-லாக அதேபோன்ற தோற்ற-முடைய கற்களைச் சேகரித்து வந்து தங்கள் கூட்டில் வைக்கும் பழக்கத்தில் உள்ளன. இவை சில சமயம் வேறு பறவையின் அசல் முட்டை-யைத் திருடி வந்து தம் கூட்டில் வைத்துப் பொரித்து வளர்ப்பதும் உண்டு!

'நான் ஒரு பெண்; அதனால் நான் இப்படி நடந்து-கொள்ள-வேண்டும்; அதனால் நான் பிற ஆண்களிடம், பிற பெண்களிடம் இப்படி நடந்துகொள்ள வேண்டும்; அப்படி நடந்து-கொள்ளக் கூடாது; நான் ஆணாக/-பெண்ணாக இருப்பதால் என் ஆசைகள் இப்படிப்பட்டவையாக இருக்க-லாம்; அப்படிப்பட்டவை-யாக இருக்கக்கூடாது...' இவை-யெல்-லாம் கலந்ததுதான் ஒருவரின் செக்ஷுவல் ஐடென்டிடி!



தன்னைப்பற்றி ஒருவர் என்ன நினைக்கிறார் என்பது இதன் ஒரு பகுதி. அவரைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது இதன் மறுபகுதி. இவை இரண்டும் சேர்ந்தே அவர் மற்றவர்களைப்பற்றி என்ன நினைக்கிறார் என்ற பார்வைக்கு இட்டுச் செல்கின்றன.

'நான் ஓர் ஆண். எனக்கு இன்னொரு ஆணைப் பிடிக்கிறது. நான் ஒரு பெண். எனக்கு இன்னொரு பெண்ணைப் பிடிக்-கிறது. இது வெளியில் தெரிந்தால், கேலி செய்வார்கள். என் அம்மாவும் அப்பாவும் தற்கொலை செய்துகொள்வார்கள்...' இப்படிப்பட்ட மன உளைச்சல், வளர் இளம் பருவத்தில் சிறுவருக்கு இருக்குமானால், அதன் பிற்கால விளைவுகள் தேவையற்ற சிக்கல்களை உருவாக்கும்.

அப்படியொரு உளைச்சல் நம் குழந்தைகளுக்கு இருக்கிறதா என்று தெரிந்துகொள்வது எப்படி? அப்படி இருந்தால், அதிலிருந்து அவர்களைக் காப்பாற்று-வது எப்படி?

### இந்த வார ஹோம் வொர்க்:

**மா**மல்லபுரம், கோவா போன்ற சுற்றுலா இடங்களில் சுய பால் உறவுக்-காகச் சிறுவர்களை சில டூரிஸ்ட்டுகள் பணத்தாலும், பயம் காட்டியும் கவர முயற்சிப்பது பற்றிய செய்திகளை நீங்கள் கேள்விப்பட்டது உண்டா?

- காட்டுமிராண்டித்தனம், மிருகத்தனம் என்று நீங்கள் எதையெல்லாம் வர்ணிப்பீர்கள்?
- இயற்கைக்கு விரோதமானது என்று உங்களுக்குத் தோன்றும் விஷயங்கள் என்னென்ன?
- அவற்றில் உண்மையானது, உண்மைக்குச் சம்பந்த-மில்லாதது என்று எவற்றைக் கருதுவீர்கள்? உண்மைக்கு தொடர்பற்றதைக்கூட நீங்கள் இயற்கைக்கு விரோதமானது என்று முடிவு-செய்யக் காரணம் என்ன?

– (அறிவோம்)

<<<Back ^Top

இக்கட்டுரை பற்றிய உங்கள் கருத்தைப் பதிவு செய்க:

Tamil English ( Tamil Typing :- amma = அம்மா , vikatan = விகடன்)

Rajalakshmi Name

js_raji@yahoo.com E-Mail

**Comment**

(Please note: Comment moderation is enabled and may delay your comment. There is no need to resubmit your comment.)

Post

| Name | Comments |
|---|---|
| Maruthiprasath | In the beginning the article was very interesting but nowadays the track was totally changed if this was goging to be sex education for kids in the school... i am sure that no parent will accept it. we think there are more areas which needs to be clarified |
| balachandran | You may have tried to make us think. But most people have these questions but answers. It would be useful if you write your personal answers/views on these, rather than just keep asking them. This anybody can do and are doing to themselves. |
| Observer | Congratulations to Gnani for touching a subject that is cringed upon. Inspite of evidence that homosexuality is also seen in other species besides humans, it is still considered against nature. We may not be able to understand the rationale behind their choice but that doesn't necessarily mean it is irrational. Once scientists come up with more logical explanation for homsexual choice and the genetic link to it, people will become more open minded. |
| rajagopalan | If a person doesnt feel the attraction for the opposite sex what can they do? And if they have that fatal attraction for the same sex I dont think they can control it.I think they would be better off being a homosexuals rather than marrying some one from oppostie sex and make TWO people unhappy. |
| Ram | Some truths will make the people to think twice if they do the same thing ,some will make them to inspire about it. Yours` falls into second category which is not good and eventhough it is logically right for them, but is against nature. Please let us not encourage them. |
| Balu | காட்டு வாழ்க்கையிலிருந்து கட்டுப்பாடான வாழ்க்கையும் வாழ்ந்து சலித்துப்போய் ஜபாட், லேப்டாப் சகிதமாக இன்டர்னெட் உலக தரத்துடன் மீண்டும் (கான்கிரீட்) காட்டு வாழ்க்கைக்கு மாறிக்கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் அறிந்தும் அறியாமலும் இப்போ செய்திட்டிருக்கோம்...அதனாலென்ன..இயற்க்கையை விட்டு மாறிவிட்டோமா என்ன ? |
| citra | why don't u try to show some middle level family's home? |
| SSK | hello gnani please stop the OO pages.It is boring.We want to read the articles of other best writers articles in tamil.125 weeks are enoug for you. |



FREEWP.freescreensaversandmore.com Feedback - Ads by Google

Copyright © 2007 Vikatan.com Contact Us